<u>சுருக்கம்</u>

தகவல் தொழில்நுட்பவியல் துறை - தமிழ் இணையக் கல்விக் கழகம்- மாண்புமிகு அமைச்சர் (தகவல் தொழில்நுட்பவியல்) அவர்கள் சட்டமன்றப் பேரவையில் வெளியிட்ட அறிவிப்பு- தமிழ் இணையக் கல்விக் கழகத்தில் ரூ.7.50 கோடி மதிப்பீட்டில் "மெய்நிகர் அருங்காட்சியகம்" ஒன்றை அமைத்திட 2021-22-ஆம் ஆண்டிற்கு ரூ.2.50 கோடி நிதி ஒப்பளிப்பு வழங்க ஆணையிடப்பட்டதை மாற்றம் செய்து 2021-2022-ஆம் ஆண்டிற்கு ரூ.1.50 கோடி மட்டும் நிதி ஒப்பளிப்பு வழங்கல் – ஆணைகள் - வெளியிடப்படுகின்றன.

---

**தகவல் தொழில்நுட்பவியல் (பி-2) துறை**

அரசாணை ( நிலை ) எண். 13

நாள்: 04.03.2022
பிலவ, மாசி - 20,
திருவள்ளுவர் ஆண்டு-2053.

படிக்கப்பட்டன :

1. அரசாணை (நிலை) எண்.29, தகவல் தொழில்நுட்பவியல் (பி.2) துறை, நாள் 20.11.2021.
2. தமிழ் இணையக் கல்விக் கழக இயக்குநர் (மு.கூ.பொ)அவர்களிடமிருந்து பெறப்பட்ட கடித எண்.2116/மி.நூ/2021, நாள் 23.02.2022.

****

**ஆணை:**

மேலே, முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், ரூ.7.50 கோடி மதிப்பீட்டில் "மெய்நிகர் அருங்காட்சியகம்" ஒன்றைத் தமிழ் இணையக் கல்விக்கழகத்தில் அமைத்திட, நிருவாக அனுமதியும், இதற்கென தமிழ் இணையக் கல்விக்கழகத்திற்கு 2021-22 ஆம் ஆண்டிற்கு ரூ2.50 கோடி நிதி ஒப்பளிப்பும் வழங்கி ஆணை வெளியிடப்பட்டது.

2. தமிழ் இணையக்கல்விக் கழக இயக்குநர் (மு.கூ.பொ) அவர்கள் மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் 2021-2022-ஆம் ஆண்டிற்கான மறு ஒதுக்கீட்டில் (Revised Estimation-RE) மெய்நிகர் அருங்காட்சியகம் அமைக்க ரூ.1.50 கோடி மட்டுமே நிதித் துறை ஒதுக்கீடு செய்துள்ளதாகவும், எனவே, "மெய்நிகர் அருங்காட்சியகம்" ஒன்றை தமிழ் இணையக் கல்விக்கழகத்தில் அமைத்திட 2021-22 ஆம் ஆண்டிற்கு ரூ.1.50 கோடி நிதி ஒப்பளிப்பு வழங்குமாறும் கோரியுள்ளார்.

3. தமிழ் இணையக் கல்விக் கழக இயக்குநர் (மு.கூ.பொ) அவர்களது கருத்துருவினை அரசு நன்கு ஆய்வு செய்து, அதனை ஏற்கலாமென முடிவு செய்துள்ளது. அதன்படி, தமிழ் இணையக் கல்விக் கழகத்தில் ரூ.7.50 கோடி மதிப்பீட்டில் "மெய்நிகர் அருங்காட்சியகம்" ஒன்றை அமைத்திட முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் 2021-22-ஆம் ஆண்டிற்கு ரூ.2.50 கோடி

...2

வழங்குவதற்கு ஒப்பளிக்கப்பட்டதை திருத்தம் செய்து அதற்குப் பதிலாக 2021-22-ஆம் ஆண்டிற்கு ரூ.1.50 கோடி (ரூபாய் ஒரு கோடியே ஐம்பது இலட்சம் மட்டும்) மட்டும் நிதி ஒப்பளிப்பு வழங்கலாம் என அரசு ஆணையிடுகிறது.

4. மேலே பத்தி 3-இல் ஒப்பளிக்கப்பட்டுள்ள செலவினம் கீழ்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்படும்:

2202-பொதுக்கல்வி-03-பல்கலைக்கழகக் கல்வியும் உயர்கல்வியும் 102-பல்கலைக் கழகங்களுக்கு நிதி உதவி-மாநில செலவினங்கள் — BK -தமிழ் இணையக் கல்விக்கழகம்-309 உதவித் தொகை-03 குறிப்பிட்ட திட்டங்களுக்கான உதவித் தொகை.

IFHRMS CODE (தொகு)-2202-03-102-BK-30903

5. மேலே பத்தி-3-ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட செலவினத்தை மேற்கொள்ளத் தேவையான நிதியானது, 2021-2022-ஆம் ஆண்டு வரவு — செலவுத் திட்ட மறுமதிப்பீட்டில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்தொகையைப் பெற்று, தமிழ் இணையக் கல்விக்கழக இயக்குநர் அவர்களுக்கு ECS மூலமாக தமிழ் இணையக் கல்விக் கழகத்தின் இந்தியன் வங்கி, கோட்டூர்புரம் கிளை எண். 00T117, IFS குறியீட்டு எண். IDIB000T117, நடப்புக் கணக்கு எண். 955548440–இல் பற்று வரவு வைப்பதற்கு தகவல் தொழில்நுட்பவியல் (பட்டியல்) துறை பிரிவு அலுவலர் அவர்களுக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது.

6. மேலே பத்தி 3-இல் ஒப்பளிக்கப்பட்டுள்ள தொகைக்கான பயன்பாட்டுச் சான்றிதழையும், விரிவான செலவின அறிக்கையையும் அரசுக்கு அனுப்புமாறு தமிழ் இணையக் கல்விக் கழக இயக்குநர் (மு.கூ.பொ) அவர்கள் அறிவுறுத்தப்படுகிறார்.

7. இவ்வாணை நிதித் (தொழில்) துறையின் அ.சா.கு.எண். 9748/நிதி(தொழில்)/2022, நாள் 03.03.2022-இல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

நீரஜ் மித்தல்
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்

இயக்குநர் (மு.கூ.பொ),
தமிழ் இணையக் கல்விக் கழகம்,
கோட்டூர், சென்னை - 600 025.

மாநிலக் கணக்குத் தலைவர் (A&E), சென்னை - 18/35.

தலைமைக் கணக்குத் தலைவர் (Audit I), சென்னை - 600 018.

தலைமைக் கணக்குத் தலைவர் (Audit II), சென்னை - 600 018.

தலைமைக் கணக்குத் தலைவர் (CAB), சென்னை - 600 018.

சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை – 600 009.

கருவூலம் மற்றும் கணக்குத் துறை, சென்னை - 600 015.

உள்ளுறை தணிக்கை அலுவலர், சென்னை – 600 009.

**நகல்:**

மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை-600 009.

மாண்புமிகு அமைச்சர் (தகவல் தொழில் நுட்பவியல்) அவர்களின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை-600 009.

நிதி (தொழில்) துறை, சென்னை-600 009.

இருப்புக் கோப்பு/உதிரி

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

07/03/2022

பிரிவு அலுவலர்

07/03/2022